# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
### IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No.S.T.C.363/2023 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா.1 |
| Name | : | இமானுவேல் நேசகுமார், உதவி இயக்குநர், மருந்துகள் கட்டுப்பாட்டு துறை மண்டலம்-1, சென்னை. |
| Father's Name | : | த.பெ.தர்மசீலன் |
| Village | : | . |
| Taluk | : | . |
| Calling | : | . |
| Religion | : | **கிருஸ்துவர்** |
| Age | : | ˙ .39 |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 22.04.2026.

**எதிரி ஆஜர்.**

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது உதவி இயக்குநராக மருந்துகள் கட்டுப்பாட்டு துறை மண்டலம்-1, சென்னையில் பணிபுரிந்து வருகிறேன். இதற்கு முன்பு 2021ம் வருடம் வேலூர் மண்டலத்தில் செய்யாறு சரக மருந்துகள் ஆய்வாளராக பணியில் இருந்தேன். நான் மருந்துகடையில் ஆய்வு செய்வது, பரிசோதனைக்காக மருந்துகள் மாதிரி எடுப்பது, புகார் சம்மந்தமாக விசாரணை மேற்கொள்வது மற்றும் பிற மருந்துகள் சம்மந்தமான பணிகள் எனக்கு ஒதுக்கப்பட்டதாகும்.

மருந்து கடைகளில் மருந்துகள் சட்டம் விதி 65ன் கீழ் என்னென்ன ஆவணங்கள் பராமரிக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களை நான் ஆய்வு செய்வேன். எதிரி ஸ்ரீரமணா பார்மசி என்கிற பெயரில் உரிய மருந்துகள் கட்டுப்பாட்டு துறையிடமிருந்து அனுமதி பெற்று மருந்துகடை எண்.4/487, பஜார் தெரு, நல்லூர் தபால் என்கிற விலாசத்தில் கடை நடத்தி வருகிறார்.

நான ் கடந்த 18.03.2021ம் தேதி பகல் சுமார் 11.00 மணி அளவில் எதிரியினுடைய மருந்து கடைக்கு ஆய்விற்காக சென்றேன். ஆய்வின்போது கடையின் உரிமையாளராகிய எதிரி இருந்தார். கடைக்குரிய மருந்து விற்பனை உரிமம் இருந்தது. ஆய்வின்போது கடையின் மருந்தாளுனர் திரு.பாலாஜி என்பவர் இல்லை. (மருந்துகள ் சட்டம் பிரிவு 18(சி) உ/இ விதி எண்.65(2)ன்படி பட்டியலிடப்பட்ட மருந்துகளை மருந்தாளுனா ் மட்டுமே தனிப்பட்ட மேற்பார்வையில் விற்பனை செய்ய முடியும் என்று குறிப்பிட்டுள்ளது.)

கடையில் விற்பனை பில் புத்தகம் ஆய்வு செய்தேன். அதில் பில் வரிசை எண்.10487, தேதி 10.02.2021 வரை எழுதப்பட்டிருந்தது.

மருந்து சீட்டு பதிவேடு ஆய்வு செய்தேன், ஆனால் ஆய்வின்போது அந்த பதிவேடு கடையில ் இல்லை. அது குறித்து எதிரியிடம ் கேட்டபோது மருந்தாளுனர் எடுத்துச்சென்றிருப்பதாக சொன்னார்.

மருந்து கடையில் மருந்துகள் விற்பனைக்கு இருப்பில் இருந்த சில மருந்துகளில் கொள்முதல் மற்றும் விற்பனை விவரங்கள் சரிபார்த்தேன். அவற்றில் சில மருந்துகள் உரிய விற்பனை பில் போடாமல் விற்பனை செய்யபட்டது தெரியவந்தது.

மேற்படி கடையில் சட்டவிதி மீறல்கள் இருப்பது கண்டறியப்பட்டதால் அன்றைய தினமே எதிரிக்கு உடனடியாக மெமோ வழங்கப்பட்டது. அதில் எதிரிடமிருந்து 1) மருந்து உரிமம் படிவம் 20, 21, 2) புதுப்பித்தல் சான்று, 3) மருந்துச்சீட்டு பதிவேடு 01.01.2021ல் இருந்து 18.03.2021 வரை 4)விற்பனை ரசீது நகல்கள் 1.1.2021 முதல் 18.03.2021 வரை. 5)கொள்முதல் ரசீதுகள் 1.ஸ்வஸ்திக் ஏஜென்சிஸ் ரசீது எண். டி.01028068-1, தேதி 29.01.2021, 2).ராதா டிரக்ஸ், ஆரணி ரசீது எண்.ஒய்.ஆர்.டி.001895, தேதி 15.01.2021, 3) ராதா டிரக்ஸ, ஆரணி ரசீது எண்.ஒய்.ஆர்.டி.002069 தேதி 21.01.2021, 4) ராதா டிரக்ஸ், ஆரணி ரசீது எண்.ஆர்.டி.017675, தேத 12.02.2021 ஆகிய ஆவணங்களை கோரி எதிரிக்கு மெமோ வழங்கினேன். எதிரி அந்த மெமோவினை பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்திட்டு அத்தாட்சி செய்துள்ளார். அந்த மெமோஅ.த.சா.ஆ.1 ஆகும்.

ஆய்வின்போது எதிரி தான் கைப்பட ஒரு கடிதம் எழுதி எனக்கு கொடுத்தார் (4 பக்கங்கள்). அதில் எதிரி ஆய்வின்போது மருந்தாளுனர் கடைக்கு வரவில்லை என்றும், மருந்துச்சீட்டு பதிவேடு மருந்தாளுனா் கையெழுத்து போடுவதற்காக தன்னுடன் எடுத்துச்சென்றுவிட்டதாகவும், பில் புத்தகம் 10482, தேதி 10.02.2021 வரை எழுதப்பட்டிருந்தது என்றும், 13.02.2021 முதல் 17.03.2021 வரை அவரது மனைவியின் உடல்நிலை சரியில்லாத காரணத்தால் மருந்துகடை மூடப்பட்டிருந்ததால் எழுதப்படவில்லை என்றும், அன்று விற்பனைக்கு இருந்த சில மருந்துகளின் இருப்பு விவரத்தை குறிப்பிட்டிருந்தார் (9 மருந்துகள்). மேலும் நான் கோரிய ஆவணங்களில் மருந்து சீட்டு பதிவேடைதவிர மற்ற ஆவணங்களை ஒப்படைத்ததாகவும் எழுதி கடிதம்மூலம் கொடுத்தார். அந்த கடிதம் அ.த.சா.ஆ.2 ஆகும் ( 2 தாள்கள் 4 பக்கங்கள்).

எதிரியிடமிருந்து பெறப்பட்ட ஆவணங்களில் அசலில் இருந்து நகல் சரி பார்க்கப்பட்டு தேவையான ஆவணங்களில் எதிரியின் கையொப்பத்தினை சான்றொப்பமாக பெற்றும், எதிரி கடையின் முத்திரையை வைத்தும் பெற்றுக்கொணடு அசல் ஆவணங்களை அன்றே திருப்பி கொடுத்துவிட்டேன். மருந்து உரிமம் நிலுவையில் இருந்ததற்கான ஆவணம் அ.த.சா.ஆ.3 ஆகும்( 5 தாள்கள்). கொள்முதல் பில்கள் அ.த.சா.ஆ.4 ஆகும் (7 தாள்கள்).

விற்பனை பில் புத்தகத்தின் நகல் வரிசை எண்.10201 முதல் தேதி 08.12.2020 முதல் 10482 தேதி 10.02.2021 வரை அ.த.சா.ஆ.5 (வரிசை ) ஆகும் 31 தாள்கள். இந்த ஆவணத்திலும் எதிரியிடமிருந்து சான்றொப்பமும், முத்திரையும் பெற்றேன்.

பின்பு 24.03.2021ம் தேதி எதிரி தன்னுடைய மருந்து கடையின் மருந்துசீட்டு பதிவேட்டினை கடிதத்துடன் சமர்ப்பித்தார். அந்த கடிதம் அ.த.சா.ஆ.6 ஆகும் அதனுடன் இணைத்துகொடுத்த சான்றொப்பம் இடப்பட்ட மருந்துசீட்டு பதிவேடு அ.த.சா.ஆ.7 (வரிசை) 13 தாள்கள் ஆகும். எதிரி கடிதம் கொடுக்கும்போது அசல் பதிவேட்டினை நகலுடன் சரிபார்த்து நகள்கலின் சான்றொப்பம்பெற்று அசலை அன்றைய தினமே திருப்பி கொடுத்துவிட்டேன்.

மேற்படி ஆவணங்களை ஆய்வு செய்தபோது எதிரி மருந்து கடையில் உரிய மருந்தாளுனரின் தனிப்பட்ட மேற்பார்வை இல்லாமல் மருந்துகளை விற்பனை செய்தது தெரியவந்தது. அது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(சி) உ/இ விதி எண்.65(2)ன்படி சட்டமீறலாகும் என்று தெரியவந்தது.

மேலும் ஆய்வின்போது எதிரி மருந்து கடையில் மருந்துச்சீட்டு பதிவேட்டினை பராமரிக்கவில்லை மற்றும் பின்னர் எதிரி சமா்ப்பித்த மருந்துசீட்டு பதிவேட்டை சரிபார்த்ததில் அதில் மருந்துகள் மருந்துவா் மற்றும் பயணாளிகளின் பெயா் மற்றும் முகவரி இருக்க வேண்டும் ஆனால் மருத்துவா் மற்றும் பயணாளியின் பெயா் இருந்தது, முகவரி இல்லாமல் இருந்தது. மேலும் மருத்துவரின் பரிந்துரையின் பேரில் விற்பனை செய்யப்பட்ட மருந்துகளின் விவரங்களை குறிப்பிடவில்லை. எனவே மருந்துச்சீட்டு பதிவேடு முறையாக பராமரிக்கப்படவில்லையென்று தெரியவந்தது. அது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(சி) உ/இ விதி எண்.65(3)(1)ன்படி சட்டமீறலாகும் என்று தெரியவந்தது.

மேலும் எதிரியின் கடையில் ஆய்வின்போது விற்பனைக்கென்று இருப்பில் இருந்த சில மருந்துகளின் கொள்முதல் இருப்பு மற்றும் விற்பனை விவரங்களை சரிபார்த்தபோது எதிரி அட்டவணையில் குறிப்பிட்டுள்ள சில மருந்துகளை உரிய விற்பனை பில் இல்லாமல் விற்பனை செய்தது தெரியவந்தது. அது மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(சி) உ/இ விதி எண்.65(4)(3)(i)ன்படி சட்டமீறலாகும் என்று தெரியவந்தது.

எனவே மேற்கண்ட சட்டமீறல்களுக்காக விளக்கம்கோரி 30.11.2021ம் தேதி எதிரிக்கு மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940ன் கீழ் குறிப்பாணை அனுப்பப்பட்டது. அது அ.த.சா.ஆ.8 (வரிசை) 5 தாள்கள் ஆகும்.

மேற்படி குறிப்பாணைக்கு எதிரி 21.12.2021ம் தேதி நேரடியாக அலுவலகம் ஆஜராகி விளக்க கடிதம் கொடுத்தார் அது அ.த.சா.ஆ.9 ஆகும்.

பின்பு 21.12.2021ம் தேதி மருந்தாளுனர் திரு.பாலாஜி அலுவலகம் ஆஜராகி விளக்க கடிதம் கொடுத்தார். அது அ.த.சா.ஆ.10 ஆகும்.

பின்பு இயக்குநர் அலுவலகத்திற்கு மேற்படி சட்ட விதிமீறல்களுக்காக எதிரிமீது வழக்கு தொடுக்க அனுமதி கேட்டு அனுமதி கடிதம் அனுப்பப்பட்டு, இயக்குநர் அலுவலகத்தில் இருந்து 03.02.2022 தேதியிட்ட அனுமதியாணை அனுப்பப்பட்டு 09.02.2022ம் தேதி பெறப்பட்டது. அதில் எதிரியின்மீது 1) மருந்துகள் மற்றும் அழகு சாதன பொருட்கள் சட்டம் 1940 பிரிவு 18(சி) உ/இ விதி எண்.65(2),65(3)(1), 65(4),(3)(i)ன்படி தண்டனை பிரிவு 27(டி)(3 எண்ணிக்கை) ன்கீழ் வழக்கு தொடுக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பின்பு 26.05.2023ம் தேதி மேற்படி ஆவணங்களுடன் நீதிமன்றத்தில் நான் இந்த குற்றமுறையீட்டை தாக்கல் செய்தேன். அது அ.த.சா.ஆ.11 (வரிசை) (6 தாள்கள்) ஆகும்.

குற்றமுயைீட்டில் கண்டுள்ளவாறு எதிரிக்கு தண்டனை வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் 18.03.2021 அன்று தான் ஆய்விற்காக சென்றேன் என்றால் சரிதான். 20.01.2020 முதல் 2021ம் வருடம் முடியும ் வரையில் கொராணா பெறுந்தொற்று உச்சத்தில் இருந்தது என்றால் சரிதான். பொதுவாக மருந்துகடைகளுக்கு ஆய்விற்கு சென்று அங்கு மருந்துகளை ஆய்வு செய்ய அதற்கான வாரண்டுடன் சென்றேனா என்றால் ஆய்வு செய்வதற்கும் மருந்துகளை சோதனை செய்வதற்கும் ஆணை அவசியம் இல்லை. நான் ஆய்விற்கு சென்ற தேதிக்கு முன்பு 2 மாதங்கள் அந்த மருந்துகடை 13.02.2021 முதல் 17.03.2021 வரை மூடப்பட்டு இருந்த விவரம் ஆய்வின்மூலம் தெரியவந்தது என்றால் சரிதான். நான் ஆய்விற்கு சென்று முடித்த பிறகு சுமார் 8 மாதங்கள் கழித்துதான் 30.11.2021 தேதி விளக்கம் கேட்டு எதிரிக்கு கடிதம் கொடுத்தேன் என்றால் சரிதான். தனிநபர் புகார் எதிரிக்கு எதிராக 23.06.2023ம் தேதிதான் நீதிமன்றத்தல் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். சுமார் 2 1/4 ஆண்டுகள் கழித்துதான் தனிநபர் புகார் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எதிரிக்கு கொடுக்கப்பட்ட விளக்க அறிவிப்பு கடித்திலும் மற்றும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த புகாரிலும் மேற்படி காலதாமதத்திற்கான காரணம ் குறித்து குறிப்பாக குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிடவில்லை.

எதிரிக்கு விளக்கம் கேட்டு கொடுக்கப்பட்ட அறிவிப்பிற்கு எதிரி பதில் கொடுத்து அதனுடன் ஆவணங்களை தாக்கல் செய்தபோது அதனை பரிசீலித்து சரியாக இருந்ததாக நான் குறிப்பிட்டேனா என்றால் சரியல்ல. நான் ஆய்விற்கு சென்றபோது மருந்தாளுனர் உடல்நிலை சரியில்லாததால் அன்றைய தினம் ஆஜரில் இல்லையென்று எனது விசாரணையில் தெரியவந்ததா என்றால் மருந்தாளுனர் கொடுத்த பதில் கடிதத்தில் அவ்வாறு குறிப்பிட்டிருந்தார்.

நான ் ஆய்விற்கு சென்றபோது அன்றைய தினம ் மருந்தாளுனரின் மேற்பார்வை இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டது சட்டப்படி தவறு மேலும் மற்ற விதிமீறல்கள் இருந்ததால் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

குறிப்பாக எந்த தேதியில் இருந்து மருந்தாளுனரின்மேற்பார்வை இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டது என்பது குறித்து ஆவணங்கள் நகல்கள் எதையும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் மருந்தாளுனா் பராமரிக்கவேண்டிய மருந்துசீட்டுகள் பதிவேடு ஆய்வின்போது கடையில் இல்லை. அவ்வாறுகடையில் பதிவேடு இல்லாத சூழ்நிலையில் மருந்தாளுனரின் மேற்பார்வை இல்லாமல்தான் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டிருக்கும் என்ற அனுமானித்துக்கொண்டேன் என்றால் சரியல்ல. மருந்தாளுனரின் மேற்பார்வையில்லாமல் விற்பனை செய்யப்பட்ட ஆவணத்தினை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் மருந்தாளுனர் அலுவலகத்தில் ஆஜராகி மருந்தாளுனர் எடுத்துச்சென்றுவிட்டதாக எழுதி கொடுத்துள்ளார். அவ்வாறு இருக்கும்போது மருந்தாளுனரின் மேற்பார்வை இல்லாமல் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டதாக குற்றச்சாட்டினை எதன் அடிப்படையில் புகார் எதிரிக்கு எதிராக தாக்கல்

செய்துள்ளேன் என்றால் நான் ஆய்விற்கு சென்றபோது என்னிடம் பதிவேட்டினை ஆய்விற்கு உட்படுத்த கொடுக்கவில்லை. பின்னிட்டு 24.03.2021ம் தேதி அலுவலகம் ஆஜராகி எதிரி கொடுத்தபோது, பதிவேட்டில் மருந்தாளுனரின் கையொப்பம் இருந்தது.

கொரோனா காலம் உச்சத்தில் இருந்த காலத்தில் மருந்துகள் சம்மந்தமான விதிமுறைகள் தளர்வு செய்யப்பட்டிருந்ததா என்றால் இல்லை. நான் ஆய்விற்கு சென்ற சமயம் கொரோணா நோய்தொற்று காலம் என்றால் சரிதான். அந்த சமயத்தில் மத்திய அரசு மருந்துகள் சம்மந்தமாக மருந்துகள்வேண்டி நோயாளிகள் போன்மூலமாகவும், இ -மெயில்மூலமாகவோ தகவல் வந்தால் அவர்களுக்கு வீட்டிற்கே கொண்டு சென்று மருந்துகளை விற்பனை செய்யவும் அதற்கான மருந்துசீட்டுகளை 30 நாட்களுக்குள் தாக்கல் செய்ய தளர்வு கொடுக்கப்பட்டிருததா என்றால் இல்லை.

என்னிடம் காட்டப்படும் மத்திய அரசின் 26.03.2020 அரசாணையில்

“ i) The licensee shall submit an e-mail ID for registration with the licensing authority if prescriptions are to be received through e-mail.

ii) The drugs shall be supplied at the doorstep of the patients located within the same revenue district where the licensee is located.

iii) In case of chronic diseases, the prescription shall be dispensed only if it is presented to the licensee within 30 days of its issue and in acute cases, the prescription shall be dispensed only if it is preented to licensee within 7 days of its issue.

iv) The bill or cashmemo shall be sent by the return e-mail and records of all such transactions shall be maintained by the licensee.”

என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

நான சொல்லும எந்தவித குற்றச்சாட்டுகளுக்கும அதற்கான ஆதாரம் இல்லையென்பதாலும் மேலும் நான் ஆய்விற்கு சென்ற சமயம் கொரோணா காலகட்டம் என்பதாலும் அப்போது மருந்துகள் விற்பனை அத்தியவசிய பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததால் அது சம்மந்தமாக தளர்வுகள் மருந்தகங்களுக்கு கொடுக்கப்பட்டிருந்தது தெரிந்தும் நான் எதிரிக்கு எதிராக புகாரினை கொடுத்துள்ளேன் என்றால்சரியல்ல.

மேலும் அதேபோல் தமிழக அரசின் வருவாய்துறை பேரிடர் மேலாண்மை அரசாணை எண்.172/2020 மருந்தகங்களுக்கு தளர்வுகள் கொடுக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. ஆய்விற்குசென்ற தேதியில் மருந்தாளுனர் உடல்நிலை சரியில்லாமல் வராததை கருத்தில் கொள்ளாமலும் மேலும் நான் முன்வைத்த குற்றச்சாட்டுகளுக்கு போதுமான பதில்களை முன்வைத்தபோதும் அதனை கருத்தில் கொள்ளாமல் எதிரிக்குஎதிராக உள்நோக்கத்தோடு தனிநபர் புகார்தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேலும் காலதாமதமாக விளக்க அறிவிப்பும், புகாரும் தாக்கல் செய்திருப்பதிலிருந்தே பொய்யான வழக்கு என்று தெரிய வருகிறது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை.**

இல்லை.